ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021 யூன் 17

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 ஏப்பிறல்

## பொதுநோக்கு

*2021 ஏப்பிறலில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை கலப்பான செயலாற்றத்தினை வெளிக்காட்டியது. வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக 2021 ஏப்பிறலில் விரிவடைந்த அதேவேளையில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டது. குறிப்பாக, ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் 2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தாலும் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து காணப்பட்டன. இருப்பினும், தொழிலாளர் பணவனுப்பல்கள் அதன் உத்வேகத்தைத் தொடர்ந்தும் பேணி 2021 ஏப்பிறலில் குறிப்படத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளையில், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு இம்மாத காலப்பகுதியில் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்ட கூட்டுக்கடன் வசதிப் பெறுகைகளுடன் வலுவடைந்தது. ஏப்பிறல் மாத நடுப்பகுதியில் சில தளம்பல்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் இலங்கை ரூபா இம்மாதம் முழுவதும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது.*

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | ஏப்பிறல் 2020 ஐ.அ.டொ.மில் | ஏப்பிறல் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-ஏப் 2020 ஐ.அ.டொ.மில் | சன-ஏப் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 282 | 818 | 189.8 | 2,932 | 3,800 | 29.6 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,123 | 1,707 | 52.1 | 5,625 | 6,748 | 20.0 |
| வர்த்தக மீதி | -840 | -889 | | -2,693 | -2,948 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 6 (இ) | - | 682 (ஆ) | 19 (இ) | -97.3 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 375 | 519 | 38.3 | 1,975 | 2,386 | 20.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | - | -16 | | -28 | -107 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 142 | 500(உ) | | 972 | 799 (ஊ) | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 1 | 0.1 | | 84 | 8 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 141 | வி.கி | | 388 | 291 (ஊ) | |
| கூட்டுக் கடன்கள் (மொத்தம்) | - | 500 | | 500 | 500 | |
| திரண்ட நிலுவை | | | | -290 | -929 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(உ) அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்களுக்கான தரவுகள் 2021 ஏப்பிறலில் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கவில்லை.
(ஊ) நீண்ட காலக் கடன்களுக்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் 2021 மாச்சு வரையிலான வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளன.


இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
. https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக 2021 ஏப்பிறல் மாதத்தில் விரிவடைந்து 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 840 மில்லியன் மற்றும் 2021 மாச்சில் ஐ.அ.டொலர் 832 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 889 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டாலும் 2020 ஏப்பிறலின் முடக்க காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. அதேவேளை, 2021 சனவரி – ஏப்பிறல் காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறை 2020 இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,693 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,948 மில்லியனிற்கு விரிவடைந்தது. இவ்விளைவிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.


**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பை விட இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு உயர்வாக இருந்தமையினால் 2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் 5.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – ஏப்பிறல் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொலர் மில்.)**





**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகள் செயலாற்றம்

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையால் அமுல்படுத்தப்பட்ட நாடளாவிய ரிதியான முடக்கல் வழிமுறைகளுக்கு மத்தியில் 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க தாழ்ந்த பெறுமதியான ஐ.அ.டொலர் 282 மில்லியனிலிருந்து 2021 ஏப்பிறலில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 818 மில்லியனிற்கு 189.8 சதவீதத்தினால் அதிகரித்து ஏப்பிறல் மாதமொன்றிற்கான என்றுமில்லாத உயர்ந்தளவான பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இருப்பினும், 2021 மாச்சில் பதிவுசெய்த ஐ.அ.டொலர் 1,094 மில்லியன் ஏற்றுமதி வருவாய்களை விட 2021 ஏப்பிறலில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 25.2 சதவீதத்தினால் குறைவாகக் காணப்பட்டமையானது ஏப்பிறலில் உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலைத் தொடக்கத்தின் தாக்கத்தினையும் பண்டிகை விடுமுறை தொடர்பிலான விருத்திகளையும் பிரதிபலிக்கின்றது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிகளின் சகல துணைத் துறைகளிலிருந்துமான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 ஏப்பிறலில் 302.5 சதவீதத்தினால் கணிசமானளவு மேம்பட்டன. பெற்றோலிய பொருட்களான தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள் (முக்கியமாக பாதணிகள்), விலங்குத்தீன் (முக்கியமாக நாய்ஃபூனை உணவு) மற்றும் அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் (முக்கியமாக நாணயத் தாள்கள்) துணைத் துறைகள் தவிர்ந்த கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மாதாந்த அடிப்படையில் 22.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முக்கியமாக புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள், மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான வருவாய்கள் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. அதேவேளை, உயர்ந்தளவான நப்தா ஏற்றுமதிகளின் காரணமாக முன்னைய மாதத்தினை விட 2021 ஏப்பிறலில் பெற்றோலிய ஏற்றுமதிப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் மேம்பாடடைந்த அதேவேளையில், இவ்வாறான ஏற்றுமதி விலைகளின் சராசரி விலைகளின் அதிகரிப்புக்கு மத்தியிலும் வானூர்திகளினதும் கப்பல்களினதும் வருகைக்கான வானூர்தி எரிபொருளினதும் நீர்க்கல எரிபொருளினதும் வழங்கல் அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்புடன் நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.


**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்களுடன் தொடர்பான சகல துணைத் துறைகளிலிருந்துமான ஏற்றுமதி வருவாய்கள் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் 35.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தாலும் ஓராண்டுக்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 37.7 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. உயர்ந்த ஏற்றுமதி விலைகள் காணப்பட்டமைக்கு மத்தியிலும், தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த ஏற்றுமதி அளவுகள் காரணமாக கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. மேலும், வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக கருவா, மிளகு மற்றும் கராம்பு), தெங்கு (உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டும்), கடலுணவு மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2021 மாச்சினை விட 2021 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** கனிப்பொருள் ஏற்றுமதிகளின் சகல துணைத் துறைகளிலிருந்துமான வருவாய்கள் 2020 ஏப்பிறலில் காணப்பட்ட ஏற்றுமதி வருவாய்களை விட 2021 ஏப்பிறலில் (332.9 சதவீதத்தினால்) அதிகரித்துக் காணப்பட்ட போதும், 2021 மாச்சில் காணப்பட்ட ஏற்றுமதி

வருவாய்களை விட (10.3 சதவீதத்தினால்) குறைவடைந்து காணப்பட்டன. 2021 மாச்சினை விட 2021 ஏப்பிறலில் காணப்பட்ட கனிப்பொருள் ஏற்றுமதிகளின் வீழ்ச்சி, மண் மற்றும் கல் (முக்கியமாக பளிங்கு) மற்றும் தாது, சாம்பல் கட்டிகள் மற்றும் சாம்பல் (முக்கியமாக டைட்டானியம் தாது) போன்ற துணைத் துறைகளிலிருந்தான குறைந்தளவான வருவாய்களைப் பிரதிபலித்தன.


**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** 2021 ஏப்பிறலில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 182.0 சதவீதத்தினாலும் 2.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது உயர்ந்த ஏற்றுமதி அளவுகளினதும் விலைகளினதும் இணைந்த தாக்கத்தின் காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்(அ)

| வகை | ஏப்பிறல் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஏப்பிறல் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஏப் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஏப் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **160.8** | **647.0** | **302.5** | **2,294.8** | **2,949.4** | **28.5** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 16.6 | 35.0 | 111.1 | 126.9 | 167.4 | 32.0 |
| விலங்குத்தீன் | 4.3 | 9.3 | 114.8 | 29.7 | 38.9 | 30.6 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 65.2 | 366.0 | 461.2 | 1,320.1 | 1,699.5 | 28.7 |
| இதில் ஆடைகள் | 58.1 | 336.9 | 479.4 | 1,222.0 | 1,556.0 | 27.3 |
| புடவைகள் | 5.1 | 20.6 | 300.2 | 70.1 | 98.9 | 41.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 1.9 | 8.5 | 340.1 | 28.0 | 44.5 | 59.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 24.2 | 61.6 | 154.4 | 220.3 | 317.9 | 44.3 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 0.1 | 24.2 | 18,053.4 | 54.7 | 95.0 | 73.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 9.0 | 31.0 | 244.5 | 95.4 | 156.0 | 63.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 1.4 | 7.4 | 436.0 | 19.1 | 34.1 | 78.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 14.5 | 36.3 | 149.9 | 192.2 | 122.1 | -36.5 |
| இரசாயன உற்பத்திகள் | 7.7 | 15.3 | 99.3 | 45.4 | 68.3 | 50.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 2.8 | 8.4 | 205.3 | 29.3 | 39.7 | 35.5 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 1.0 | 12.3 | 1,094.2 | 11.7 | 22.1 | 88.2 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 1.0 | 3.8 | 262.1 | 17.6 | 14.9 | -15.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 1.3 | 5.0 | 276.9 | 16.3 | 24.2 | 48.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 6.2 | 8.7 | 39.7 | 37.7 | 42.0 | 11.4 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 0.3 | 2.0 | 499.0 | 6.4 | 11.3 | 75.5 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 5.0 | 20.8 | 316.0 | 71.8 | 96.2 | 34.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **120.3** | **165.6** | **37.7** | **626.8** | **829.4** | **32.3** |
| தேயிலை | 78.4 | 79.3 | 1.1 | 348.4 | 417.4 | 19.8 |
| இறப்பர் | 1.6 | 3.2 | 102.7 | 8.8 | 15.4 | 75.6 |
| தேங்காய் | 14.3 | 27.3 | 91.3 | 84.7 | 123.6 | 45.9 |
| வாசனைத்திரவியங்கள் | 12.0 | 22.4 | 85.8 | 63.1 | 136.2 | 115.8 |
| காய்கறிகள் | 1.2 | 1.9 | 50.7 | 8.1 | 8.4 | 3.9 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.6 | 2.7 | 69.8 | 6.0 | 11.3 | 88.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 4.9 | 9.7 | 96.8 | 44.5 | 41.6 | -6.6 |
| கடலுணவு | 6.3 | 19.2 | 206.0 | 63.3 | 75.6 | 19.4 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.0** | **4.2** | **332.9** | **5.9** | **16.0** | **172.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **0.3** | **1.3** | **412.3** | **4.4** | **5.6** | **25.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **282.3** | **818.2** | **189.8** | **2,931.9** | **3,800.3** | **29.6** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையின் தாக்கங்களும் தாழ்ந்த உலகளாவிய பெற்றோலிய விலைகளும் காணப்பட்ட காலப்பகுதியான 2020 ஏப்பிறலில் பதிவு செய்யப்பட்ட குறைந்த இறக்குமதிச் செலவினமான ஐ.அ.டொலர் 1,123 மில்லியனிலிருந்து 2021 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 1,707 மில்லியனிற்கு 52.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** இறக்குமதிச் செலவினத்தின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பானது இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பால் உந்தப்பட்டது. இருப்பினும், 2021 மாச்சு மற்றும் 2021 ஏப்பிறல் இரண்டிலும் இறக்குமதிப் பெறுமதிகள் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை விட உயர்ந்தளவில் காணப்பட்ட போதிலும், இறக்குமதிச் செலவினம் 2021 மாச்சுடன் (ஐ.அ.டொலர் 1,926 மில்லியன்) ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் கணிசமானளவு குறைவடைந்து (11.4 சதவீதத்தினால்) காணப்பட்டது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் இரண்டிலும் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியுடன், 2021 ஏப்பிறலில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினமானது 2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 7.9 சதவீதத்தினாலும் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 26.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. உணவு மற்றும் குடிபானங்களில் சீனி மற்றும் இனிப்பு வகைகள், காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம், பருப்பு மற்றும் உருளைக்கிழங்கு), பால் உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), வாசனைத் திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) மற்றும் எண்ணெய்களும் கொழுப்புக்களும் போன்ற விடயங்களுக்கான இறக்குமதிகள் மீதான செலவினம் மாதாந்த அடிப்படையில் குறைவடைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்களில் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள்), மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் (முக்கியமாக தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் மின்விசிறிகள்) என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினம் மாதாந்த அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. மாறாக, கடலுணவு (முக்கியமாக உலர் உணவு), தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (முக்கியமாக அரிசி) என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் அதிகரித்ததுக் காணப்பட்டது.


**இடைநிலைப் பொருட்கள்:** 2021 ஏப்பிறலில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் ஓராண்டுக்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 88.6 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டாலும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பல இடைநிலைப் பொருட்கள் குறிப்பாக அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், உணவு தயாரிப்புக்கள் மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தது. மாறாக, எரிபொருள், வளமாக்கிகள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான செலவினம் மாதாந்த அடிப்படையில் அதிகரித்தது. மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலையானது 2021 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 64.07 உடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 66.44 இற்கு அதிகரித்த அதேவேளை, சுத்திகரிப்பு ஆலைகள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டிருந்தமையினால் 2021 மாச்சில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை. இருப்பினும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி மீதான செலவினம் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் மற்றும் சராசரி இறக்குமதி விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட

குறைப்பு காரணமாக வீழ்ச்சியடைந்தது காணப்பட்டது. மேலும், வளமாக்கிகள் மீதான இறக்குமதிச் செலவினம் உயர்வான இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகள் காரணமாக 2021 மாச்சினை விட 2021 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த வேளையில் சீமெந்து சூளைக்கற்களின் இறக்குமதிகள் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தன.


**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் 41.4 சதவீதத்தினால் அதிகரித்தாலும் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 15.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பொறி மற்றும் சாதனம், கட்டடப் பொருட்கள், போக்குவரத்து சாதனம் மற்றும் ஏனைய முதலீட்டுப் பொருட்கள் போன்ற முதலீட்டுப் பொருட்களின் கீழான சகல துணைத் துறைகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தது. மின் உந்து ஊர்தி மற்றும் மின்பிறப்பாக்கித் தொகுதிகள், அலுவலக இயந்திரங்கள், மருத்துவ மற்றும் ஆய்வுகூட சாதனங்கள் மற்றும் சுழலிகள் மீதான குறைந்த இறக்குமதிச் செலவினம் காரணமாக பொறி மற்றும் சாதனங்களின் இறக்குமதி மீதான செலவினமானது 2021 ஏப்பிறலில் மாதாந்த அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. மேலும், மர உற்பத்திகள், சீமெந்து மற்றும் வேளாண்மை இழுபொறி இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினம் ஏனைய துணைத் துறைகளின் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. மாறாக, பாரவூர்திகள், விசைக்குழாய்கள், கனிப்பொருள் உற்பத்திகள் (கல்நார் மற்றும் சுண்ணாம்பு போன்றன), வேளாண்மைப் பொறி, காப்பிடப்பட்ட கம்பிகளும் வடங்களும் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் அதிகரித்து காணப்பட்டது.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2021 ஏப்பிறலில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 39.8 சதவீதத்தினாலும் 8.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பானது உயர்ந்த இறக்குமதி அளவுகள் மற்றும் விலைகள் இரண்டினதும் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக அமைந்தன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றும்**




**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**



## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | ஏப்பிறல் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஏப்பிறல் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஏப் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஏப் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **302.5** | **278.6** | **-7.9** | **1,268.6** | **1,276.5** | **0.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 136.8 | 123.5 | -9.7 | 563.2 | 628.8 | 11.6 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.0 | 3.4 | 70.1 | 13.9 | 12.8 | -8.0 |
| பால் உற்பத்திகள் | 27.3 | 24.8 | -9.3 | 124.1 | 114.9 | -7.4 |
| காய்கறிகள் | 40.9 | 26.9 | -34.1 | 145.6 | 138.0 | -5.2 |
| கடலுணவு | 18.7 | 8.4 | -55.0 | 65.3 | 33.1 | -49.3 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 15.3 | 30.0 | 96.5 | 88.3 | 167.4 | 89.5 |
| வாசனைத்திரவியங்கள் | 15.3 | 9.8 | -36.0 | 50.2 | 47.5 | -5.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 17.4 | 20.3 | 16.4 | 75.8 | 115.2 | 51.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 165.7 | 155.1 | -6.4 | 705.4 | 647.7 | -8.2 |
| தனியாள் ஊர்திகள் | 60.4 | 1.1 | -98.2 | 216.8 | 3.5 | -98.4 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 39.4 | 48.6 | 23.1 | 164.8 | 192.3 | 16.7 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 16.0 | 26.4 | 65.7 | 66.5 | 97.6 | 46.8 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 12.2 | 19.2 | 57.8 | 85.3 | 74.9 | -12.2 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 14.3 | 27.2 | 89.9 | 63.0 | 137.0 | 117.4 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 10.4 | 10.7 | 2.4 | 48.3 | 53.5 | 10.8 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 13.0 | 21.9 | 68.5 | 60.6 | 88.7 | 46.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **570.0** | **1,075.0** | **88.6** | **3,115.7** | **4,065.7** | **30.5** |
| எரிபொருள் | 121.8 | 413.2 | 239.2 | 1,070.1 | 1,390.3 | 29.9 |
| இதில் மசகெண்ணெய் | 14.2 | 97.1 | 582.9 | 209.2 | 224.2 | 7.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 84.8 | 286.1 | 237.3 | 734.6 | 1,039.6 | 41.5 |
| நிலக்கரி | 22.8 | 29.9 | 31.5 | 126.3 | 126.5 | 0.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 1.5 | 7.0 | 370.8 | 27.2 | 43.5 | 60.0 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 146.9 | 228.4 | 55.5 | 768.9 | 938.6 | 22.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 29.1 | 41.0 | 40.7 | 120.0 | 146.8 | 22.3 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.5 | 19.1 | 3.1 | 69.3 | 86.6 | 24.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 9.0 | 26.7 | 197.1 | 88.8 | 120.2 | 35.3 |
| அடிப்படை உலோகங்கள் | 38.6 | 40.7 | 5.6 | 136.8 | 194.2 | 42.0 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 41.1 | 57.1 | 38.9 | 168.0 | 257.8 | 53.5 |
| இரசாயன உற்பத்திகள் | 64.9 | 90.0 | 38.7 | 255.5 | 364.6 | 42.7 |
| வளமாக்கி | 29.2 | 47.3 | 62.0 | 55.0 | 82.2 | 49.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 13.1 | 32.4 | 146.8 | 80.6 | 133.4 | 65.6 |
| கனிம உற்பத்திகள் | 12.4 | 16.8 | 34.9 | 52.4 | 44.5 | -15.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 43.9 | 55.4 | 26.2 | 223.1 | 263.0 | 17.9 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **249.6** | **353.0** | **41.4** | **1,233.4** | **1,403.1** | **13.8** |
| பொறி மற்றும் கருவிகள் | 113.1 | 227.9 | 101.5 | 685.5 | 913.0 | 33.2 |
| கட்டடப் பொருட்கள் | 65.0 | 98.1 | 51.0 | 359.4 | 381.8 | 6.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 71.3 | 26.8 | -62.4 | 187.4 | 107.7 | -42.5 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.2 | 0.1 | -24.8 | 1.0 | 0.6 | -41.1 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **0.3** | **-35.9** | **7.7** | **2.8** | **-63.6** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த இறக்குமதிகள்** | **1,122.6** | **1,707.0** | **52.1** | **5,625.3** | **6,748.1** | **20.0** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,000.8** | **1,293.8** | **29.3** | **4,555.3** | **5,357.8** | **17.6** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது


**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்


**சுற்றுலாத் துறையானது 2021 ஏப்பிறலில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வருகைகளை பதிவு செய்தது.** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட 4,581 வருகைகளுடன் ஒப்பிடும் போது 2021 ஏப்பிறலில் 4,168 ஆக பதிவுசெய்யப்பட்டன. மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020 இன் தொடர்பான காலத்திற்கான 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2021 முதல் நான்கு மாத காலப்பகுதியில் 13,797 வருகைகளைப் பதிவுசெய்தன. 2021 ஏப்பிறல் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக இந்தியா, சீனா மற்றும் கஸகஸ்தான் என்பன காணப்பட்டன. சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 6 மில்லியனாக காணப்பட்டது. சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020 இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனிற்கு எதிராக 2021 முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 19 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**2021 ஏப்பிறலில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியைத் தொடர்ந்தும் பதிவுசெய்தன.** இதன்படி, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 ஏப்பிறலில் ஐ.அ.டொ 519 மில்லியனிற்கு 38.3 சதவீதத்தினால் அதிகரித்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையின் ஆரம்பம் மற்றும் தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டின் காலத் தாக்கம் காணப்பட்ட கடந்த ஆண்டின் தொடர்பான மாதத்தின் தளத்தாக்கமானது இவ் உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு பங்களித்தது. முதல் நான்கு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 2,386 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டது.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

**2021 ஏப்பிறலில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டது.** 2021இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 5 மில்லியனாக காணப்பட்டது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 ஏப்பிறல் இறுதியளவில் ஐ.அ.டொலர் 31 மில்லியனாக தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 ஏப்பிறலில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2021இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 107 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது. 2021 ஏப்பிறலில் அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் மீதான மொத்த உட்பாய்ச்சல்கள் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான கூட்டுக்கடன் வசதிப் பெறுகையினை உள்ளடக்கியுள்ளது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**2021 ஏப்பிறல் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது இறக்குமதிகளின் 3.1 மாதங்களுக்குச் சமனாகக் காணப்படுகின்றது.** அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனாக விளங்கி 4.9 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்படுகின்றது. மேலே அறிக்கையிடப்பட்ட ஒதுக்குகளின் மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்று வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**






**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**2021 ஏப்பிறலில் செலாவணி வீதத்தில் தற்காலிகமான பாரிய பணவுயர்வொன்று அவதானிக்கப்பட்டது.** 2021 மாச்சு இறுதியில் பதியப்பட்ட அதே மட்டத்தில் ஏப்பிறல் நடுப்பகுதி வரை தொடர்ந்தும் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியானது சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கூட்டுக்கடன் வசதிப் பெறுகையினைத் தொடர்ந்து உடனடியாக பாரியளவில் உயர்வடைந்தது. இருப்பினும், செலாவணி வீதம் மாதத்தின் இறுதிப் பகுதியில் முன்னைய மட்டங்களிற்குத் திரும்பியது. ஒட்டுமொத்தமாக, ஏப்பிறல் மாதப்பகுதியில் இலங்கை ரூபாவின் தேய்மானம் ஐ.அ. டொலருக்கெதிராக 0.3 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. 2021 யூன் 17 வரையான காலப்பகுதியில் ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக 6.7 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2021 யூன் 17 வரையான காலப்பகுதியில் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுன், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கு எதிராக தேய்வடைந்த அதேவேளையில் யப்பானிய யென்னிற்கு எதிராக உயர்வடைந்தது. மத்திய வங்கி 2021 ஏப்பிறல் காலப்பகுதியில் கடன்படாத வளங்களினூடாகவும் அதேபோல் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியின் தேறிய அடிப்படையிலும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக தேறிய அடிப்படையில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைத் தொடர்ந்தும் ஈர்த்துக்கொண்டது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | (2021 மே 17 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.7% |
| யூரோ | +2.6% | -11.2% | -5.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -10.2% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -1.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -7.7% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -6.5% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி